## எல்லா எதிர்ப்பையும், மிரட்டலையும் கடந்து

# விஸ்வரூபம் எடுத்து நிற்கக்கூடிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உறுதி!

**தென்காசி, ஜூன்.4-**

**எல்லாவிதமான எதிர்ப்புகளையும் மிரட்டல்களையும் கடந்து, விஸ்வரூபம் எடுத்து நிற்கக் கூடிய இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்று கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உறுதிபட உரையாற்றினார்.**

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூரில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவரு மான கனிமொழி கருணாநிதி எம்.பி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை திறந்து வைத்தார். இதைத் தொடர்ந்து தி.மு.க. கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றார்.

டி.என். புதுக்குடி மற்றும் புளியங்குடி பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பேசியதாவது:-

நம்முடைய இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் வரை அழைத்து வந்து இவருக்கு எதிராக பிரச்சாரம் செய்யும் சூழல் அமைந்திருந்தது. அதற்கு பின்புலமாக மிகப்பெரிய நிறு வனங்கள் எல்லாம் நின்று பணியாற்றியது. ஆனால் அத்தனையையும் உடைத்த நம்முடைய ராஜா, இங்கே உங்களுடைய அன்பை பெற்று, ஆதரவை பெற்று வெற்றி பெற்று இருக்கிறார்.

### வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்!

அவர் வெற்றி பெற்றதை தொடர்ந்து ஒரு நீண்ட பட்டியலை உங்களுக்கு செய்து தருகிறேன் என உறுதி அளித்திருக்கிறார். நிச்சயமாக செய்து தருவார். ஏனென்றால் அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த சங்கரன்கோவிலுக்கு எப்படியும் எல்லா அதிகாரிகளையும் எல்லா அமைச்சர்களை யும் சந்தித்து நேரடியாக தன்னுடையதொகுதிக்கு வேண்டுவதையெல்லாம் வாங்கி வந்திடுவார். அதனால் நிச்சயமா நீங்க நம்பிக்கையோடு இருக்கலாம். அவர் உங்களுக்கு தந்திருக்கக் கூடிய வாக்குறுதி களை எல்லாம் நிறைவேற்றி தருவார்.

ஆனால் ஒன்னே ஒன்னு மக்களுக்கு பணியாற்றுவதற்கும், மக்களுக்காக பணியாற்ற கூடியவர்களுக்கு உறுதுணை யாக இருக்கக்கூடிய ஒரு ஆட்சி வேண்டும். அது நம்முடைய திராவிடமாடல் ஆட்சி. நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்களுடைய ஆட்சி. ஆனால் இன்று இருக்கக்கூடியவர்கள் எப்படிப்பட்ட ஆட்சி நடத்துவார்கள் என்று உங்களுக்கு தெரியும்.

ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்ட 23 நாட்கள் கடந்து விட்டது. இன்றோடு தமிழகத்திலேயே இதுவரை இந்த 23 நாட்களிலே 64 கொலை சம்பவங்கள், நடந்திருக்கிறது. 111 பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் நடந்திருக்கிறது. அதில் 61 குழந்தைகளுக்கு எதிரானது. இன்றைக்கும் கூட பெண்களுக்கு எதிரான 2 குற்ற சம்பவங்கள் நடந்திருக்கிறது. மதுரையிலே ஒரு வண்டியிலிருந்து ஒரு பெண்ணுடைய இறந்த சடலத்தை எடுத்து இருக்கிறார்கள். இன்னொரு பகுதியில மூன்று வயது குழந்தை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கக் கூடிய செய்தியை நாம் பார்க்கிறோம்.

### தி.மு.கழக ஆட்சியில் நிலைமை இப்படி அல்ல!

இப்படிப்பட்ட கொடுமைகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கக் கூடிய நேரத்திலே ஆட்சி பொறுப்பேற்று இருக்கக்கூடியவர்கள் அந்த பிரச்சினைகளை எப்படி சரி செய்வது என்பதை பற்றி கவலை பட வேண்டும். அதையெல்லாம் விட்டுவிட்டு சென்ற தி.மு.க. ஆட்சியில் நடந்த சில செயல்களால் தான் இன்று இவ்வாறு நடக்கிறது என்பதை ஏற்கத்தக்கது அல்ல. இப்போது தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இல்லை. நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலை தமிழ்நாட்டில் இல்லை.

பல பேர் whatsapp தளத்தில் தவறான செய்திகளை மேடைகளில் பரப்பிக் கொண்டிருந்த நேரத்தில் கூட இப்படிப்பட்ட ஒரு சூழல் தமிழ்நாட்டிலே இல்லை. நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சியின் போது இந்தியாவிலேயே பாதுகாப்பான மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு இருந்தது.

ஆனால், இன்று பெண்களுடைய பாதுகாப்பு ஒவ்வொரு நாளும் கேள்விக்குறி யாகி கொண்டிருக்கக் கூடிய ஒரு சூழலை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆட்சிப் பொறுப்பில் இருக்கக் கூடியவர்கள் பொறுப்போடு இந்த பிரச்சினைகளை களைவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். இதற்கான தீர்வுகளை தேடி, சட்டம் ஒழுங்கை சரி செய்ய முயற்சிக்க வேண்டும்.

அதையெல்லாம் விட்டுவிட்டு மறுபடியும் வேறு யார் மீது பழி போடலாம் என்று அவர்கள் காரணங்களை தேடிக் கொண்டிருந்தால் நிச்சயமாக தமிழ்நாட்டு மக்கள் அதிக நாள் பொறுமையாக காத்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அதேபோல விவசாயிகளுக்கு கூட்டுறவு கடன்களை தள்ளுபடி செய்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்தார்கள்.



தேர்தல் நேரத்தில் அந்த வாக்குறுதி கொடுக்கும் பொழுதே அவர்களுக்கு ரிசர்வ் பேங்க் சட்ட திட்டங்கள் தெரியாதா ரிசர்வ் பேங்க் பதினோராவது மாதமே அதற்கான சட்டதிட்டங்களை தெளிவாக எடுத்துச் சொல்லி இருந்தார்கள். யாருக்கு எப்படி கூட்டுறவு கடனை தள்ளுபடி செய்ய முடியுமா? முடியாதா? என்று அதற்கான வழிமுறைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி இருந்தார்கள். நம்முடைய தேர்தல் அறிக்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கை எழுதப்பட்டபோது பல இடங்களில் இருந்து கூட்டுறவு கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று ஒரு வாக்குறுதியை கொடுத்து விடுங்கள் என்று சொன்னார்கள்.

### அண்ணன் தளபதி எங்களுக்கிட்ட பணி!

நம்முடைய முதலமைச்சராக இருந்த அண்ணன் தளபதி அவர்கள் ஒன்றே ஒன்றுதான் எங்களுக்கு திரும்பத் திரும்பச் சொன்னார். அது செய்யக்கூடியவற்றை மட்டுமே வாக்குறுதியாக கொடுக்க வேண்டும். நம்மால் செய்ய முடியாததை தேர்தல் வருகிறது வாக்கு வாங்கிட வேண்டும் என்று சொல்லி மக்களை ஏமாற்றி எந்த வாக்குறுதியை எழுதக்கூடாது திராவிட முன்னேற்ற கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே என்றார். இதுதான் அவர் எங்களுக்கு சொன்ன பணி. இதுதான் அவருடைய கட்டளையாகவும், அறிவுறுத்தலாகவும் இருந்தது.

ஆட்சி பொறுப்பிற்கு வந்த பிறகு கடன் தள்ளுபடி செய்ய முடியும் என்றால் வாக்குறுதி கொடுக்காமல் கூட செய்யலாம். கடந்த ஐந்து ஆண்டுகளில் எத்தனையோ திட்டங்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்படாமல் செயல்படுத்தப்பட்டது. குறிப்பாக முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை கூட எடுத்துக் கொள்ளுங்கள். தேர்தல் வாக்குறுதிகள் சொல்லப்படவில்லை, ஆனால் நிறைவேற்றப்பட்டது.

அதனால் மக்களை ஏமாற்றி எந்த தேர்தல் வாக்குறுதியையும் கொடுத்து வெற்றி பெற வேண்டிய அவசியம் நமக்கு இல்லை என்று மிகத் தெளிவாக அந்த சிந்தனையோடு செயல்பட்டது திராவிட முன்னேற்றக் கழகம். இன்றைக்கு ஆட்சி பொறுப்பிற்கு வந்துவிட்டு ரிசர்வ் பேங்கில் இருக்கக்கூடிய சட்ட திட்டங்கள் இதற்கு புறம்பாக இருக்கிறது எங்களால் செய்ய முடியலை என்கிறார்கள். மேலும், நிதிநிலை சரியாக இல்லை என்று எல்லாருக்கும் தெரியும். யாரையாவது குறை சொல்லிக் கொண்டு அவர்கள் மீது பழியை போட்டு விட்டு ஆட்சி பொறுப்பிலே இருக்கக் கூடியவர்கள் பொறுப்பை தட்டிக் கழிக்கக் கூடாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் தான் இன்னைக்கு எதிர்க்கட்சி. எதிர்க்கட்சியிலே எப்படி செயல்பட வேண்டும் என்று எங்களுக்கு தெரியும் உங்களுக்கு அவகாசம் தருகிறோம். ஆனால் தவறு இருந்தால் போராடவும், சுட்டிக்காட்டவும் எந்த காலத்திலும் திராவிட முன்னேற்றக் கழகம் தவறாது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

### ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலத்திட்டங்கள்!

நம்முடைய ஆட்சியிலே நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தன்னுடைய திட்டங்கள் போய் சேராத ஒரு குடும்பம் கூட தமிழ்நாட்டிலே இல்லை என்று சொல்லக்கூடிய பெருமை மிகுந்த ஆட்சியை நடத்தி காட்டி இருக்கிறார். இந்த பகுதியில் இருக்கக்கூடிய சிறுபான்மை மக்களுக்கு அரணாக இருக்கக் கூடிய ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான். இதை ஒவ்வொரு முறையும் நிரூபித்து காட்டிய ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி.

இது இன்று நேற்று மட்டுமல்ல தலைவர் கலைஞர், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சி செய்ததிலிருந்து தொடர்ந்து ஒடுக்கப்பட்ட மக்களோடு சிறுபான்மை மக்களோடு தொடர்ந்து உறுதியாக இருக்கக் கூடிய ஒரே இயக்கம் திராவிட முன்னேற்ற கழகம். இங்கு இருக்கக்கூடிய சகோதரி களுக்காக எந்தெந்த வகையிலே எத்தனை திட்டங்களை கொண்டுவந்து அவர் களுடைய வாழ்க்கையை மேம்படுத்த முடியுமோ அத்தனை சாதனைகளையும் செய்து முடித்திருக்கிறோம். அந்த பெருமை யோடு தான் நாங்கள் இந்த மேடையிலே நின்று கொண்டிருக்கிறோம். வெற்றி வாய்ப்பை தவற விட்டு இருந்தாலும் நாங்கள் பெருமிதத்தோடு தலை நிமிர்ந்து தான் உங்களை ஒவ்வொரு முறையும் சந்திக்கிறோம்.

இந்த நேரத்திலே ஒன்றியத்தில் இருந்து எத்தனையோ பலத்தோடு வந்த அந்த பாஜகவை வீழ்த்தி வெற்றி பெற்ற நம்முடைய ராஜாவிற்கு வெற்றியை ஒப்படைத்து இருக்கக்கூடிய உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பகுதியிலே இருக்கக்கூடிய 22 தொகுதிகளில் பணியாற்றக்கூடிய பொறுப்பை தந்தமைக்கு நன்றி.

நாளை மறுநாள் நம்முடைய தலைவர் தலைவர் கலைஞர் அவர்களுடைய பிறந்தநாளை நாம் எதிர்கொள்ள இருக்கிறோம். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மக்கள் ஒவ்வொருவருடைய மனதிலும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய தலைவர் கலைஞர். அவர் கடந்து வந்திருக்கக் கூடிய எத்தனையோ சோதனைகள் அது எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளுங்கட்சி பொறுப்பில் இருந்தாலும் மக்களுக்கான பணிகளை தன் வாழ்நாள் முழுவதும் செய்த தலைவர் கலைஞர்.

எமர்ஜென்சி காலக்கட்டத்தில் தலைவர் கலைஞர் சென்னையிலே ஒரு பள்ளிக்கூட நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார். அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்ளும் பொழுது மேடையிலேயே முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அந்த மேடையில் பேசும்பொழுது சொல்கிறார் முதல் அமைச்சராக நான் கலந்து கொள்ளக்கூடிய கடைசி நிகழ்ச்சி இந்த நிகழ்ச்சியாக தான் இருக்கும் என்று நினைக்கிறேன் என்று சொல்லிவிட்டு மேடையில் இருந்து இறங்கி வீடு போகிறார்.

அதற்குள் ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது என்ற செய்தி அவருக்கு வருகிறது. அதனால் இந்த எதிர்ப்புகளை, மிரட்டல்களை எல்லாவற்றையும் கடந்து நின்று விஸ்வரூபம் எடுத்து நிற்கக்கூடிய இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம். அந்த உறுதியோடு தொடர்ந்து பணியாற்றுவோம். மக்களோடு நின்று களமாடுவோம். உங்களோடு எப்பொழுதும் உறுதுணையாக இருந்து உங்களுக்காக தலைவர் கலைஞர் அவர்கள் வழியிலே பணியாற்றுவோம் என்று உறுதி கூறுகிறேன்.

இவ்வாறு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளையொட்டி நேற்று (3-6-2026) சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்குப் பகுதி 171 அ வட்டத்தில் மாவட்ட பிரதிநிதி மயிலை தென்றல் வி.விஜய் ஏற்பாட்டில் 500 நபர்களுக்கு அறுசுவை உணவை மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு பொதுமக்களுக்கு வழங்கினார். உடன் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி, கீதா முரளி, மா.பாஅன்பு, சாஸ்தா குமார், ஸ்டார் குமார், மணிமாறன், பாஸ்கர், பா.கார்த்திக், பா.வைதி, ஜீவ ரத்தினம், மா.பா. தாமு, வேல்முருகன், யூ.சுரேஷ், இ.உதயா, மயிலை ஆர்.எஸ்.மனோகர், கே.பஞ்சர் முருகன், பத்மா, சுபா, ஹேமா, லாவண்யா, கௌசல்யா, கனிஷ்கா, பிரியா, கியோஷா, ஷாலினி, திவ்யா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 17 வது வட்டம் தீயம்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள முதியோர் காப்பகத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. வட்டச் செயலாளர் கே. கருணாகரன், எஸ். பாலாஜி, சி.மூர்த்தி, எம். என். அஜய் தென்னவன், எம். ஜான்சன், ஜீ.பூபாலன், மணலி புதுநகர் வினோத் உள்ளிட்ட பலர் உடன் உள்ளனர்.

### வட்ட கழக செயலாளர் ந.தமிழரசு தலைமை: முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாளை முன்னிட்டு

## 140 ‘அ’ வட்டத்தில் 1000 பேருக்கு பகல் உணவு!

### மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்! எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., முன்னிலை!

### தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 4-

ஜூன் 3, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதி 140வது அ வட்ட தி.மு.க. சார்பில் வட்டகழக செயலாளர் ந.தமிழரசு தலைமையில், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினரும் 140வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், சைதை மேற்கு பகுதி கழக துணை செயலாளர் சைதை த.சம்பத், மாவட்ட பிரதிநிதி சைதை ஆர்.ரவி, ஆகியோர் முன்னிலையில் வி.மனோகரன், சைதை ஆர்.ஜெகநாதன், தென்றல் தினேஷ், கு.கௌரி, சைதை எஸ்.பஷீர், பா.கமல்சங்கர், கே.துளசி, பிரஸ்விஜி, எல்.வைரவமூர்த்தி, ம.சுகுமார், ஐ.ராபர்ட், ஆகியோர் வரவேற்பில் 05.06.2026 (வெள்ளிக்கிழமை) நண்பகல் 12 மணியளவில் சைதாப்பேட்டை பழைய மாம்பலம் ரோடு, கிருஷ்ணப்ப நாயக்கன் தெரு சந்திப்பில் 1000 பேருக்கு மதிய உணவினை சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்.

இந்நிகழ்வில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், களக்காடிஎல்லப்பன், மின்னல்கந்தப்பன், கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை மாநில துணை அமைப்பாளர் எம்.எஸ். ஹரிபாபு, பகுதி கழக நிர்வாகிகள் டி.என்.சிவமணி, கவிதாகௌதமன், ஆர். ரமேஷ், வி.பி.ஜானகிராமன், வட்டகழக செயலாளர்கள் சை.மு.சேகர், எஸ்.பி.கோதண்டம், எம். நாகா, அட்கோ கமலநாதன், அணிகளின் அமைப்பாளர்கள் சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், ஜி.பாபு, பொன்ஜெய்சிங், ஜி.கே. ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பால்கார் ரவி, 140வது வட்ட கழக நிர்வாகிகள் வழக்கறிஞர் த.பாபு, எம்.சுரேஷ்குமார், க.பிரஸ்மணி, லால்மனோகரன், எஸ்.மணிவண்ணன், எம்.வளர்மதி, அ.வீரமணி, ஆ.கவிராஜ், ஆர்.பன்னீர், கே.ஞானம், இ.பாண்டுரங்கன், அணிகளின் நிர்வாகிகள் பி.ஆர்.துரைராஜ், ஆர்.எஸ்.டி.சிற்றரசு, ச.தினகரன், எஸ்.ரவீந்திரகுமார், ஜி.ஜே.மோசஸ், விவேக்செல்வம், ஆர்.ரோகேஷ், க.தீபன், சைதை ஐ.குமார், உள்ளிட்ட 140, 140 (அ) வட்டத்திற்குட்பட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள், பாகதலைவர்கள் , வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், வட்ட மகளிர் அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் வட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள், வட்ட தகவல் தொழில் நுட்ப அணியின் ஒருங்கிணைப்பாளர்கள், ஆகியோர் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர். இந்நிகழ்வின் இறுதியாக பகுதி பிரதிநிதி எஸ்.சரவணன், தொண்டரணி அமைப்பாளர் த.ஜெயராமன், வட்ட செயற்குழு உறுப்பினர் எம்.பூபதி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றிய பேரூர் திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் அவர்களின் 103 வது பிறந்த நாளையொட்டி அவருடைய திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி அறுசுவை உணவு 1000.நபருக்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் வழங்கினார் உடன் ஒன்றிய செயலாளர்.கெ. ஞானசேகரன் பேரூர் செயலாளர் என் எஸ் பாரி வள்ளல் பேரூராட்சி மன்ற தலைவர் பொன் சசிகுமார் துணைத் தலைவர் திருமதி இளமதி கோவிந்தராஜ் உள்ளிட்ட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்